**செ. கு. எண்:074** **நாள்: 03.08.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 3.8.2019**

---

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டத்தைச் சேர்ந்த தெற்குசேத்தி நகரத்தில் உள்ள திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் ஆடிப்பூர விழாவையொட்டி நடைபெற்ற தேரோட்டத்தில், தேர் மேல் சென்று தீபாராதனை காண்பிக்கும்போது திரு. சீதாராமன் என்பவரின் மகனான சிவாச்சாரியார் திரு.முரளி என்பவர், நிலை தடுமாறி தேரின் மேலிருந்து கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

**மேற்கண்ட நிகழ்வில் உயிரிழந்த சிவாச்சாரியார் திரு. முரளி என்பவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**உயிரிழந்த சிவாச்சாரியார் திரு. முரளி என்பவரின் குடும்பச் சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு அவரது குடும்பத்தினருக்கு மூன்று லட்சம் ரூபாய் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**